**மடுள்ள பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மடுள்ள பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மடுள்ள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்திட்டத்திற்காக கிடைத்த ரூபா 13,331,465 ஆன தொகை நிதி செயற்பாட்டு செயலாற்றல் கூற்றில் மூலதன பெறுவனவாக காண்பிக்கப்படாத இருந்ததுடன் அதில் செலவிடப்பட்டிருந்த ரூபா 14,429,080 ஆன செலவினமும் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை | அடுத்த ஆண்டுகளில் கணக்குகளை தயாரிக்கும் போது அவ்வாறான பிழைகள் இடம்பெறாமல்இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகிறேன் | மீளாய்வாண்டின் வருமானம் செலவினம் சரியாக இனம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் கிடைத்த ரூபா 109,750 ஆன நேரடி அனுப்புகை இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் திசெம்பர் மாதத்தில் கிடைத்த நேரடி அனுப்புகை மார்ச் மாதத்தின் போது இனங் காணப்பட்டுள்ளதால் அம்மாதத்தின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டதாக அறியத் தருகிறேன். | நேரடி அனுப்புகைகள் காலரீதியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) கடை களை குத்தகைக்கு வழங்கும் போது அறவிடப்படுகின்ற திருப்பி செலுத்தப்படாத ஆரம்ப வைப்புத் தொகை 2020 ஆம் ஆண்டு முதல் பொது வைப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக்கள் மீதி ரூபா 2,543,196 கூடுதலாக காண்பிக்கப் பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 1,571,528 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தற்போது வைப்பு கணக்கில் காணப்படுகின்ற ரூபா 1,571,528 வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். | வருமானம் மற்றும் வைப்பு மீதிகள் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 182,255 ஆன எஞ்சிய வீதி விளக்குகள் இருப்பு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை | அடுத்த கணக்கு தயாரிக்கும் போது அடுத்த ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது வீதி விளக்கு இருப்புக்களை எஞ்சிய இருப்பிற்கு உள்ளடக்குவதாக தயவுடன் அறிய தருகிறேன் | சரியான இருப்பு பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (உ) | மீளாய்வாண்டில் பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாட உபகரணங்களின் பெறுமதி ரூபா 676,109 தொகை மூலதனமாக்கப் பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது அப் பெறுமதியை தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்திற்கு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன் | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஊ) | மீளாய்வாண்டில் மடுள்ள சிறுவர் பூங்காவிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 500,000 பெறுமதியான அன்னப் படகுகள் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழும் மற்றும் காணி கட்டிடங்களின கீழும் இரண்டு முறை மூலதனமாக்கப்பட்டிருந்தது | அடுத்த ஆண்டு கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக தயவுடன் அறியத் தருகிறேன் | கணக்காய்வு தவறுகள் ஏற்படாத வகையில் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும் |
| (எ) | மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 2,283,541 கூட்டுப் பெறுமதியான 02 நிர்மாணங்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | அடுத்த ஆண்டின் போது நிர்மாணங்களின் பெறுமதியை கணக்கீடு செய்வதாக தயவுடன் அறியத் தருகிறேன். | ஆண்டில் செய்யப்பட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் நிர்மாணங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஏ) | பிரதேச சபைக்குரிய சுற்றுலா விடுதியை மேம்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்பட்ட ரூபா 2,271,675 மற்றும் கஹகொல்ல புலன்வல்ஆர நீர் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 698,795 தொகை மீளாய்வாண்டில் மீண்டும் மூலதனமாக்கப்பட்டிருந்தன. | கூடுதலாக மூலமாக்கப் பட்ட தொகையை அடுத்த ஆண்டின் போது அகற்றுவதாக அறியத் தருகிறேன | இரட்டிப்பு வழுக்கள் ஏற்படாத வகையில் சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஐ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 நிர்மாணங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 498,991 ஆன மற்றும் நிலுவை வாடகை தண்டப்பணம் ரூபா 100,092 தொகை நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டு கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக தயவுடன் அறியத் தருகிறேன் | மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய பெறுமதிக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் அனைத்து பெற வேண்டிய வருமானமும் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 முதல் 2019 ஆம் ஆண்டு மற்றும் 2021 காலப்பகுதயில் சபையினால் அறவிடப்பட்டிருந்த சுற்றாடல் அனுமதிப் பத்திரக் கட்டணங்களிலிருந்து 50 சதவீதம் வரும் வகையில் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 108,250 தொகையை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை | அங்கீகாரமின்றி உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள சுற்றாடல் அனுமதிப் பத்திரக் கட்டணங்களை தவணை அடிப்படையில் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு படிகள் செலுத்தப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 442,915,431 கூட்டுப்பெறுமதியான சொத்து விடயங்கள் மற்றம் 02 பொறுப்பு விடயங்கள் தொடர்பாக துறைசார் மதிப்பீட்டாளர்கள் அறிக்கை குறித்து உறுதி மற்றும் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட மையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது | காணி தொடர்பான துறைசார் மதிப்பீட்டாளர் மூலம் மதிப்பீடு செய்வதற்கும் ஆவணங்கள் மற்றும் அட்டவணைகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | சபையால் பேணிச்செல்லப்பட்டிருந்த விதி விளக்குகள் பதிவேட்டின் பிரகாரம் பிரதேசத்தில் 1276 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்த போதும் வீதிகளுக்கு வெளிச்சமுட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை | வீதிகளுக்கு வெளிச்சமூட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் எதிர்காலத்தில் உடன்படிக்கை மேற்கொள்ள கலந்துஜரயாடல் மட்டத்தில் இருப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 3,002,306ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,778,709 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 194,400 | 226,500 | 226,500 | - | 194,400 | 156,900 | 156,900 | - |
| (ii) | வாடகை | 6,658,931 | 7,048,711 | 6,643,767 | 404,944 | 19,866,100 | 8,109,700 | 2,177,916 | 5,931,784 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 699,400 | 254,027 | 255,176 | -1,149 | 769,430 | 211,706 | 196,708 | 14,998 |
| (iv) | ஏனைய வருமானம் | 15,266,900 | 10,851,502 | 7,969,816 | 2,881,685 | 9,043,520 | - | 10,001,963 | 10,001,963 |
| | | 22,819,631 | 18,380,740 | 15,095,259 | 3,285,480 | 29,873,450 | 8,478,306 | 12,533,487 | 15,948,745 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 18,380,740 ஆன மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதிவரை ரூபா 3,285,480 தொகை அறவிடப்படாததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 18 சதவீதம் ஆகும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 28 கடைகளிலிருந்து அறவிடப்பட | நிலுவை கடை வாடகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை கடை வாடகையை விரைவில் அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய ரூபா 561,000 ஆன கடை வாடகை வருமானத் திலிருந்து 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிலுவை கடை வாடகை ரூபா 264,548 அறவிடப்பட வேண்டியிருந்தது. அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 47 சதவீதம் ஆகும் | தயவுடன் அறிய தருகின்றேன் | நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 126,839 ஆன நிலுவை நீர்க்கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன் | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிட மிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 137,167 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 2,452,723 ஆக இருந்தது. | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணத்தையும் முத்திரைக் கட்டணங்களையும் விரைவாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன் | நிலுவை முத்திரைக் கட்டணங்களையும் நீதிமன்றத் தண்டப் பணத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (உ) | 2017 முதல் 2021 காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 925,270 மற்றும் மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 588,482 ஆன நிலுவை இயந்திர வாடகை வருமானம் 2023 பெப்ரவரி 07 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை இயந்திர வாடகை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன் | நிலுவை இயந்திர வாடகை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகளை 2020 ஆம் ஆண்டில் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள | மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தை பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ள துடன் அவர்களால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை செயல்படுத்த அதிக பணம் தேவைப்படுவதால், விதிமுறைகளை பூர்த்தி செய்து | திண்மக் கழிவுப்பொருள் நிலையங்களுக்கான சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| பட்டிருக்கவில்லை | சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன் | வேண்டும் |

**3.2 <u>செயற்பாட்டு வினைத்திறனின்மை</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) பிரிவின்படி அபிவிருத்தியடைந்த பிரதேசங்கள் இனங்கண்டு வீதவரி விதிக்கப்பட வேண்டிய போதிலும் மடுள்ள பிரதேச சபையால் 2021 மே மாதம் அபிவிருத்தியடைந்த பிரதேசஙகளை இனங்கண்டு உரிய தரப்பினரிடம் அனுமதி பெற்றிருந்த போதிலும் இல்லை. வீதவரி விதித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | மாகன்தன்ன - தம்பகல்லை பிரதேசம் அபிவிருத்தி யடைந்த பிரதேசமாக இனங் காணப்பட்டு வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டு வீதவரிக்கு பொறுப்பான அமைச்சரின் அனுமதி பெறப்பட்டு அபிவிருத்தியடைந்த பிரதேசத்தின் எல்லைகளை பௌதீக ரீதியாக அடையாளப்படுத்தி காலமுறை அறிக்கைகளை கோருவதற்கான அடிப்படை வேலைளை திட்டமிடுவதாக அறிய தருகின்றேன் | அபிவிருத்தியடைந்த பிரதேசங்கள் தொடர்பாக வீதவரி பிரகடனம் செய்யப்பட்டு வீதவரி அறவிடப்பட வேண்டும். |

**3.3 <u>சொத்துக்கள் முகாமைத்துவம்</u>**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான பல்வேறு அளவுகளிலான 26 காணிகள் அளவீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் 63 காணிகளின் சட்டரீதியான உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சபைக்கு சொந்தமான காணி மற்றும் மயானக் காணிகளை அளவீடு செய்து சட்ட உரிமையை பெற்றுத் கொள்வதற்கு கோரி மடுள்ள பிரதேச செயலாளருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தயவுடன் குறிப்பிடுகின்றேன். | சபைக்கு சொந்தமான காணிகளை அளவீடுகளை மேற்கொண்டு சட்டரீதியான உரிமைகள் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான மகேந்திரா வண்டி 2021 திசம்பர் 30 முதல் செயலற்று இருந்ததுடன் அதனை பழுதுபார்ப்பதற்காக தனியார் கராஜுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. 2023 ஏப்ரல் 27 ஆந் திகதி வரை பழுதுபார்ப்பதற்கு பரிந்துரை வழங்கப்பட்டு சுமார் 16 மாதங்கள் கடந்து விட்ட போதிலும், கெப் வண்டி திருத்தம் செய்யப்படவில்லை. | திருத்த வேலைகளுக்காக வருகை தந்து பரிசோதித்து பரிந்துரையை வழங்குமாறு மாகாண இயந்திரவியல் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், வந்து வாகனத்தின் ளுக்கு பரிந்துரை கிடைத்தவுடன் வாகனத்தின் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என தயவுடன் குறிப்பிடுகின்றேன். | சபைக்கு சொந்தமான வாகனங்கள் உடனடியாக பழுது நீக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டு அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரம் 2022 நவம்பர் 15 ஆந் திகதி முதல் செயலற்று இருந்ததுடன் 2023 ஏப்ரல் 27 ஆந் திகதி வரை 06 மாதங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் உழவு இயந்திரம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை | திருத்த வேலைகள் தொடர்பான விலை விபரங்களை அழைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதற்குரிய விலைவிபரங்கள் கோரப்பட்டு திருத்த வேலைகளை உடனடியாக செய்யப்படும் என்பதை தயவுடன் குறிப்பிடுகிறேன். | சபைக்கு சொந்தமான வாகனங்களை விரைவில் திருத்திபயன்பாட்டுக் கு கொண்டு வர வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 02 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை மிகைத்து 14 ஊழியர்கள் மிகையாக காணப்படுவதுடன் மிகை ஊழியர்களை அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உள்ளூராட்சிமன்ற திணைக்களத்திடம் விசாரித்த சந்தர்ப்பத்தில் அமைச்சு மட்டத்தில் அது சமப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைக அறவிக்கப்பட்டிருந்தது. | மிகை பதவியணியினை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக ˙ பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் ஆண்டின் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே 5 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலும் மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 3 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக் கப்பட்டதால் வருமான செலவின கட்டுப்பாட்டில் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | மதிப்பிடப்பட்ட வருமானங்கள், செலவினங்கள் மற்றும் உள்ளவாறான வருமானங்கள் செலவினங்களுக்கு இடையே விலகல்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | விலகல்களை குறைக்க கூடிய வகையில் பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட வேண்டும் |